

கோவை சுமங்கலி ஓவல்லர்ஸ் ஸ்தாபகர் மறைந்த லயன் ஏ.ஆர். விஸ்வநாதன் அவர்களின் மனைவி கிரிஜா விஸ்வநாதன் இயற்கை எய்தினார். அன்னாரின் உடலுக்கு கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி இறுதி மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கோவை மாநகரில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதி செல்வ சிந்தாமணி குளத்தில் கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!"

தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பெ.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, அக். 29- கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ் நாட்டில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.



இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. த.வெ.க அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ்நாட்டை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசை கண்டித்து தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் வருகின்ற 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தருமபுரி, BSNL அலுவலகம் அருகில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறவுள்ளது. அதுசமயம் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக மகளிர் அணி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச்செயலாளர் முனைவர் பெ. பழனியப்பன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை அருகே 3 பள்ளிச் சிறுமிகள் மாயம்!

திருவண்ணாமலை, அக்.29- திருவண்ணாமலை மாவட்டம் பட்டு பகுதியில் 3 பள்ளிச் சிறுமிகளை காணவில்லை என புகார் அளிக்கப் பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள ஆலம்பூண்டி கிராமத்தை சேர்ந்த வடிவேலு-பவானி தம்பதியினரின் 2-வது மகள் ஹேமலதா என்கிற ஹேமாவதி (வயது 7). கடந்த 11-ந் தேதி தன்னுடைய பிறந்த நாள் விழாவை கொண்டாடி விட்டு பெற்றோருடன் படுத்து தூங்கினாள். மறுநாள் அதிகாலை 5.30 மணியளவில் பெற்றோர் எழுந்து பார்த்தபோது ஹேமலதாவை காணவில்லை. பல்வேறு இடங்களில் பெற்றோர், உறவினர்கள் தேடிப்பார்த்தும் சிறுமி கிடைக்கவில்லை.

இதுகுறித்து சிறுமியின் தாய் பவானி கொடுத்த புகாரின் பேரில் சத்தியமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். சிறுமியை கண்டுபிடிக்க 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு பல்வேறு கோணங்களில் தீவிரமாக விசாரணை நடத்தப்பட்டது. இருப்பினும் சிறுமியை பற்றிய எந்தவொரு தடயமும் சிக்காததால் இவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி. போலீசாரின் விசாரணைக்கு மாற்றப்பட்டது.

சிறுமி காணாமல் போய் இன்றுடன் 16 நாட்கள் ஆகும் நிலையில் அவளை பற்றிய எந்தவொரு துப்பும் துலங்காததால் கிராம மக்கள் பெரும் அதிர்ச்சியில் உள்ளனர். தொடர்ந்து, நேற்றும் 5-வது நாளாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணையை தொடர்ந்தனர். சிறுமியின் தாய், தந்தை, பாட்டி மற்றும் உறவினர்களிடம் தனித்தனியாக துருவி, துருவி விசாரணை நடத்தினர். செஞ்சி சிறுமி காணாமல் போன வழக்கில், தற்போது ஆர்காம்பூண்டி எனும் பகுதியில் வீட்டில் பதிவான சிசிடிவி காட்சிகளை சிபிசிஐடி ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மேலும் ஒரு அதிர்ச்சி சம்பவமாக திருவண்ணாமலை மாவட்டம் தண்டாரம்பட்டு பகுதியில் 3 பள்ளிச் சிறுமிகளை காணவில்லை என புகார் அளிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் கேரளாவில் கூலி வேலை செய்து வரும் நிலையில், நேற்று பள்ளி சென்ற 2 சகோதரிகள் மற்று 1 உறவுக்கார சிறுமி என 3 மாணவிகள் (8,9,10 ஆம் வகுப்பு) இன்னும் வீடு திரும்பவில்லை என தண்டராம்பட்டு காவல்நிலையத்தில் உறவினர்கள் புகார் அளித்துள்ளனர்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, 82 வது வார்டுக்குட்பட்ட, கோட்டைமேடு ஈஸ்வரன் கோவில், டவுன்ஹால் வின்சென்ட் சாலை உள்ளிட்ட பகுதிகளில் தொடர் கன மழையால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களை கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ் உள்பட பலர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வடுவூர் இரா.சாமிநாதன்

அக்டோபர் 29 (2013)



அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றிய போது,கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஆசிரியப் பணியை துறந்து கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வடுவூர் கிளைச் செயலாளர், நீடாமங்கலம் ஒன்றிய அவைத்தலைவர் – செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மன்னார்குடி நிலவள வங்கித் தலைவராக பதவி வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திருமங்கலம் இளைஞரணி அமைப்பாளர் முத்துக்குமார் தந்தை

நகர்மன்ற முன்னாள் துணைத்தலைவர்-எம்.ராஜேந்திரன் மறைவு!

மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. – கழக நிர்வாகிகள் – கழகத்தினர் அஞ்சலி !

மதுரை,அக். 29- மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர திமுக இளைஞரணி அமைப்பாளர் முத்துக்குமார் தந்தையும், திருமங்கலம் நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார் மாமனாரும், முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் திருமங்கலம் நகர இளைஞரணி செயலாளராக பதவி வகித்தவருமான எம்.ராஜேந்திரன் உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்து கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. மற்றும் திரளான கழகத்தினர் பொது மக்கள் நேரில் அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.

அதன் விபரம்

திருமங்கலம் நகர் திமுக முன்னாள் இளைஞர் அணி செயலாளர், முன்னாள் நகர்மன்ற துணை தலைவரான எம்.ராஜேந்திரன் உடல்நல குறைவு காரணமாக இயற்கை எய்தினார்

இவர் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர் ஆவார், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நன்கு பழகி திமுக சார்பில் நகராட்சியில் போட்டியிட்டு நகர்மன்ற துணைத் தலைவராகவும் மக்கள் சேவை செய்தவர் ஆவார்

அன்னாரின் மறைவு செய்தி அறிந்த மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. நேரில் சென்று மலர் வலையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்



மேலும் கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன், லதா அதியமான், முத்து ராமலிங்கம், சாமிநாதன், ஸ்ரீதர், செல்லம்பட்டி முத்துராமன், எஸ்.ஒ.ஆர். தங்கப்பாண்டி, கீர்த்திகா தங்கபாண்டியன், ஆதவன் அதியமான், கொ. தனபாண்டியன், தங்கபாண்டியன், மதன்குமார், நாகராஜன், சுதாகரன், அஜித் பாண்டி, ராமமூர்த்தி, ஜெயச்சந்திரன், முருகன், செல்லம், சௌந்தரபாண்டி, உசிலை சிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள், நகர்மன்ற நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் என திரளானோர் பங்கேற்று அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(26.10.2026)



1. சேலம் நகரின் மத்திய பகுதியில் நிலத் தகராறு காரணமாக காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு திரும்பிய ரவுடி சரமாரியாக வெட்டி கொலை , பட்டப் பகலில் பயங்கரம் ...

2. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே ஆழ்வார் கற்குளத்தில் கோவில் திருவிழாவில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் கல்லூரி மாணவர் வெட்டிக்கொலை ...

3. மதுரை மாவட்டம் மேலூர் அருகே கீழவளவு வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை கடத்திக் கொன்ற கொடூரம்....



4. ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே ஆக்கிடவலசை கிராமத்தில் பிறந்து 20 நாட்கள் ஆன பெண் குழந்தை குளத்தில் மூழ்கடித்து கொலை ? ...

5. திண்டிவனம் அருகே முயல் வேட்டைக்கு சென்ற தொழிலாளி மின் வேலியில் சிக்கி பலி. போலீசுக்கு பயந்து அவரது உடலை ஏரியில் வீசிய தோட்ட காவலாளி சிக்கினார் ...

6. தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே தேக்கம்பட்டியில் உள்ள கிளை சிறையில் இருந்து சிறை காவலர்களை தாக்கி விட்டு 15 கைதிகள் தப்பி ஓட்டம் ...

7. சென்னையை அடுத்த எண்ணூர் தாழங்குப்பத்தில் மூன்று வயது சிறுமியை பலாத்காரம் செய்த த.வெ.க.வை சேர்ந்த ஆசாமி சிக்கினான்...



8. சென்னை அம்பத்தூர் அருகே இரண்டு சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த தாயும் மகனும் சிக்கினர் ...

9. காரைக்குடியில் இன்ஸ்டாகிராமில் செய்தி அனுப்புவது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் இளம் பெண்ணை நடுரோட்டில் சரமாரியாக தாக்கி. மாட்டுச் சாணத்தை தலையில் ஊற்றி அவமதித்த த.வெ.க. பெண் நிர்வாகி ...

10. சென்னை ஓட்டேரியில் ஏமாத்தம்மன் கோவில் திருவிழா தேர் ஊர்வலத்தின் போது பேண்டு அடிப்பதில் தகராறு. இரண்டு பேருக்கு சரமாரியாக அரிவாள் வெட்டு ...

11. சென்னை பெரம்பூரில் சுகாதார ஆய்வாளரிடம் செல்போனை பறித்துச் சென்ற ஆசாமி சிக்கினான் ...

12. சென்னை கொடுங்கையூரில் பணியில் இருந்த மின்வாரிய ஊழியரை வழிமறித்து பீர் பாட்டிலால் தாக்கி மோட்டார் சைக்கிளை பறித்துச் சென்ற ஆசாமி ...

13. சென்னையை அடுத்த ஆதம்பாக்கத்தில் வேலையை விட்டு திரும்பிய இளம் பெண்ணை வழிமறித்து கத்தியை காட்டி ஒன்றரை சவரன் தங்கச் செயின் பறிப்பு ...

14. சென்னை கொடுங்கையூர் எம் கே.பி.நகர் பகுதியில் தடை செய்யப்பட்ட குட்கா விற்பனை அமோகம் , 50 கிலோ ஜர்தா சிக்கியது....


15. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே 7 வயது சிறுமி மாயமான வழக்கில், 15 நாட்களாகியும், துப்பு துலக்க முடியாமல் திணறும் காவல்துறை.

16. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அருகே ஜீமங்கலத்தில் காதல் விவகாரத்தில் இளம்பெண் அரிவாளால் வெட்டிக்கொலை.



17. திண்டுக்கல் சிறுமலை பகுதியில் கணேசன் என்பவரது தோட்டத்து வீட்டில் இருந்த ரூ.7 லட்சம் மாயமானதாக கூறி தொழிலாளர்கள் மீது தாக்குதல் ஒருவர் பலி.

18. விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே முன்விரோதம் காரணமாக இளைஞருக்கு அரிவாள் வெட்டு.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகே உள்ள உடுக்கம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.46.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வகுப்பறைகளை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இதில் உடுமலைப்பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் தி.செழியன், உடுக்கம்பாளையம் பரமசிவம், கோழிக்கடை முருகன், ராமு, கே. ரெட்டிபாளையம் மோகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.